# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு]   யாழ்ப்பாணம்:-  கர வருடம் தை மீ உரு உ  செவ்வாய்க்கிழமை (5 பிப்ரவரி 1952)   [இல - அஉ]


திருத்தொண்டர் திருநாள்

## அன்பு பிழம்பாய்த் - - - - திரிந்த அடியார்

### காளத்தி அப்பனுக்கு கண்ணிடம் தப்பிய கருணை

[உடல் பொருள் ஆவி அர்ப்பணத்தின் உருவாய கண்ணப்பநாயனர் திருநாள் விழாவது போலிப் பரோபகாரிகள் கண்விழிப்பார்களா?]

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலை இவ்வா றறிநீ" என் றருள்செய்தார்.

சைவசமய ஒழுக்கம் அன்புநெறி அறிவுநெறி என இருவகைத்தாய்த் திகழும். திண்ணனார் அன்புநெறியினர். அவர்கள் எல்லாம் திருக்குடையமலங் காளத்தியப்பரது அருளைக் காலழிந்தொழிந்தன. பசுகரணங்கள் பதிகரணங்களாயின. அவர் மாசிலா அன்புருவம் எய்தினர்.

முன்பு திருக்காளத்தி முதல்வனாருளுக்கால், இன்புறுவேகத் திரும்பு பொனனுற்போல் யாக்கை, தன்பரிசும் வினையிரண்டு சாரு மல மூன்று மற, அன்பு பிழம்பாய்த் திரிவாரவர் கருத்தினளவினரோ.

நாயனாரது செயலை சிலர் செயலாக நினைத்து அவர் செய்தபடியே நாமுஞ் செய்கிறோமென்று தீவினைகளைச்செய்தால், அவ்வாறு செய்பவரை எரிவாய் நரகு எதிர்பார்த்திருக்குமென்பது சொல்லவும் வேண்டுமோ?

அன்பே சிவமா யமையுந் தன்மையை நாயனாரது திருச்சரிதை இனிது விளக்குகின்றது. சைவமக்களாகிய நாம் இந்த உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்தொழுகி இன்புற்று வாழுவோமாக.

அவரது அன்பின் பெருமை அளவிடற்கரியது

"கண்ணப்பன ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என் னொப்பில்
என்னையுமாட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன் னீற்றற்கே
சென்றூதாய்கோத்தும்பீ.

என மணிவாசகப் பெருமான் தந்தருளிய மணிமொழிகள் நாயனாரது அன்பின் திறத்தை ஒருவாறு உய்த்துணரச்செய்யும். அளவிடற்கரிய அன்பால் அவர் சிவமேயாயினர்.

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்...."

என்னுந் திருமந்திரம் இதனை வலியுறுத்தும். இதனாலேயே ஆகம விதிக்கு மாறுபாடுடையவெனினும் அவரது உமிழ்நீர் திருமஞ்சனமாகவும் ஊனைச்சி திருவமுதாகவும் திருக்காளத்தியப்பர் திருவுளத்துக் கேற்பனவாயமைந்தன. இவர் சிவ இயல்பின்றி நின்றனர், இவரது செயலெல்லாம் சிவச் செயலாயின.

இவனுலகில் இதமகிதஞ்
செய்த வெல்லா........
சிவனுமிவன் செய்திடவெலா
மென்செய்தி யென்றால்....
பாதகத்தைச் செய்திடினும்
பணியாகக் கிவிடுமே" (சி. சி)

என்பது ஈண்டு உற்று நோக்கத்தக்கது.

### அகில உலக படக்காட்சி விழா

இந்திய பிரதமர் உதவிய புதிதி மொழி

அகில உலக படக்காட்சி விழாவொன்று முதன் முறையாக இந்தியாவில் நடக்கப் போகின்றது. இருபத்தைந்து நாடுகள் இதிற் பங்குபற்றுகின்றன. பட உற்பத்தித் துறையில் பல உலக நாடுகளுள் இந்தியா இரண்டாவதாயிருக்கின்றதெனபது எடுத்துக் காட்டப்படுகின்றது.

தீயவழியிற் கிளர்ச்சியையுண்டுபண்ணும் படங்களைத் தவிர்த்து வாழ்க்கையின் சிறந்த உறுப்புக்களைக் காண்பிக்கும் படங்களை அமைப்பதே நன்றெனப் பட உற்பத்தியாளருக்குத் தாமனுப்பிய விசேஷ செய்தியிற் பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்.

### மிளகாய்

இந்த வருட முற்பகுதியில் 800 தொன் மிளகாய் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதற்கு சென்னை அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கின்றது.

### மெய் இலங்கு 'வெண் ணீற்று மேனியாய்'

திருச்சிற்றம்பலம்

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருன் மெய்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுதவிட்டு நீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே.

திருச்சிற்றம்பலம்

### விநாயகராலயத்திற் பார்வைக் கண்ணாடி விநோதம்

கண்டி மாநகரத்திற் கட்டுக்கலை வீதியிலெழுந்தருளி யிருக்கும் செல்வ விநாயகர் திருக்கோயிலில் அடியார் பக்தியை வளர்க்குந் திருவுருவங்கள் முதலிய பலவமைந்திருப்பதைப் புகழ்ந்து கூறுகின்ற அன்பர் திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்கள் அதே கோயில்வசந்த மண்டபத்தில் ஓர் பளிங்குக் கண்ணாடி வைத்திருப்பதைக் கண்டு துன்புற்றெழுகின்றார்.

புலன்வழிச் செல்லும் பழக்கத்தையொழித்து அருள் வழி நின்று வழிபாடாற்றுதற்கே அடியார் திருக்கோயில்களுக்குப் போகின்றனராகலின் அன்னார் உடலழகைப்பார்த்து உள்ளங்களை வேறுபடுத்துதற்குதவியாயக் கண்ணாடியமையுமென்பதுண்மையே. கோயிலதிகாரிகள் அக் கண்ணாடியை யகற்றுதலே முறையாகும்.

### காந்தியடிகளின் அமரத்துவ தினம்

மறவன்புலோ கிராமமுன்னேற்றச்சங்கம், சமூக சேவா சங்கம் பெற்றோர் ஆசிரிய சங்கம் என்பவற்றின் ஆதரவில் 29-1-52 செவ்வாய்க்கிழமை பிற்பகல் காந்தியடிகளின் திருவுருவப்படம் பலவரிசைகளுடன் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டது. மறுநாள் (30-1-22) பிற்பகல் 3 மணியளவில் மறவன்புலோ சகலகலாவல்லிவித்தியாசாலையில் தலைமை ஆசிரியர் திரு. கா பொன்னம்பலம் அவர்களின் தலைமையிற் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. காந்தியடிகள் உலகத்துக்குச்செய்த நன்மைகளைப்பாராட்டிப் பல சொற்பொழிவுகள் ஆற்றப்பெற்றன.

### கமக்காரர் குடியேற்றம்

அடுத்த மூன்று வருடம் தகுந்த மழையின்றி யாழ்ப்பாணக் கமக்காரருக்குப் பெரும் நட்டமேற்படுதலால் நீர்வளமுள்ள இடங்களிற் குடியேறிக் கமத்தொழிலை விருத்தி பண்ணவேண்டுமென்று காரைநகர் கமக்காரர் ஓர் கூட்டம் கூடித் தீர்மானித்திருக்கின்றனர்.

ஆசிரியத் தலை

## விடுதலை நாளைப்பற்றி விபரீதம்

### வெள்ளையர் - - வெளியேறியதோடு விமோசனமா?

### உள்ளத் தெழுந்த உற்சாகமில்லை

இலங்கை புறநாட்டாரின் ஆளுகையினின்றும் விடுதலையடைந்த திகதி மாசி 4-ம் நாள். அகில உலகிலும் விடுதலை நாள் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்படுவது வழக்கம். இலங்கையில் அவ்வண்ணம் இல்லாதிருப்பது என்னையோ?

**பகற் கனவா?**

ஒரு காரணம், மின்னுது முழங்காது விடுதலைமழை பெய்தது. இரண்டாவது விடுதலையினால் உண்டான மாற்றம் வெளிப்படையாக இல்லாமை. இதற்கிடையில் ஒரு சாரார் பூரண விடுதலை யடைந்தபாலமையில் மனப்பூரிப்பு. இன்னொருசாரார் விடுதலையென்பது வெறுங் கதை, பகற்கனவு-மாசாலம்-என்று ஓரே அடியான மறுப்பு. பிறிதொருசாரார் இவ்விரு பான்மையினருக்கும் இடையே, ஏதோ ஒரு மாறுதல் உண்டு என்ற எண்ணங் கொண்டவர்களாய் வெளிப்புயிலைக் கவலையுமில்லை என்ற கொள்கையினர்.

இத்தகைய நிலைமையில் உள்ளத்தில் எவ்வளவு [illegible] ஏற்படும். செய்கை முறையில் ஒரு குதூகலம் காட்டலாமேயன்றி, துள்ளி ஆனந்தக்கூத்தார்தான் ஆடுவார்.

பாடுபட்டுப் பெறாத எப்பேறும் விலைமதிப்புடையதாகாதென்பது உலக அநுபவம். எனினும் வெள்ளையர்கள் வெளியேறிவிட்டதை நினைத்தாவது விடுதலை உணர்ச்சியைச் செயற்கை முறையிலாயினும் பழகிக் கொண்டு வருதல் நன்று.

### இலங்கை இந்திய வர்த்தகம்

இலங்கை இந்திய அரசாங்கங்கள் இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. இதனாற் சில நெருக்கடி குறையுமென்று [illegible]

திருக்கோணேசுவரம்

### திருவுருவங்கள் எழுந்தருளும் திருநாள்

தேவாரம் பாடப்பெற்ற தலங்கள் ஈழத்தில் இரண்டுள. அவை திருக்கேதீச்சரமும் திருக்கோணேசர் மலையுமாகும். இத்தலங்களிலெழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் அருள் கனிவழங்குவதென்பது பண்டுதொட்டு அன்பர் உள்ளங்களிற் பதிந்திருக்கும் உறுதியான நம்பிக்கை.

மழையின்றி இந் நாட்டு மக்களாகிய நாம் மிக வருந்தினோம். எம் வருத்தத்தை நீக்கியருளுவாராய்த் திருக்கோணேசர் ஈண்டெழுந்தருளினர். அவர் திருக்கடைக்கண்சாத்தியருளுதலும் வேண்டியவாறு வானம் வழங்கிற்று. மக்களின்புற்றனர். இவ்வாறு இன்புற்ற அன்பருளொருவர்

"தஞ்சமென் றண்டினோர்க் கபயமூர்த்தி
தர்க்கங்கடந்த சிவஞான வெள்ளம்
சஞ்சலந்தீர்த்தருளும் அனாதரக்கை தத்துவத்தின்
உட்பொருளாய் விளங்குஞ் சோதி
கஞ்சமலர்த் திருவடிகள் சரணமென்று கைகூப்பி
உன்னருகில் ஓடி வந்தேன்
வஞ்சவினை போக்கி ஆட்கொள்ளும் வள்ளால்
வருக வுன்னருள் மாரிபொழிக ஐயா"

என அருள்மாரி வேண்டுகின்றார்.

வேண்டுவார் வேண்டுவதீ வாராய்த் தைத்திங்கள் 27-ம் நாள் (9 - 2 - 52) கோணேசப் பெருமான் தமது திருக்கோயிலில் எழுந்தருளி யிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அர்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

இந்துசாதனம்
யாழ். கர வருஷ மாசி மீ உகஉ செவ்வாய்க்கிழமை

## அடிமைத் தளை அகலவில்லையா?

விடுதலை வெற்றி அடைந்த நாடுகளில் அவ்வைபவம் நிகழ்ந்த தினத்தில் வீர முரசொலி பலமாக அதிருவது உலக வழக்கம். அண்மையி லுள்ள பாரத நாட்டின் விடுதலை நாள் அங்கு மாத்திரமன்று இந்தியர் வாழ்கின்ற எத்தேசத்திலும் அவர்களால் குதூகலமாகக் கொண்டாடப்படுவதைப் பத்திரிகைகளிலிருந்து அறிகின்றோம். இங்கேயும் இந்தியர்களும் இலங்கையரும் ஒருங்குகூடி அத்தினத்தை ஆர்வமாக நினைவுக்கு வரவழைத்து வருவதை நாம் அறிவோம். இவ்வாறாக இலங்கை, ஆங்கிலேய ஆதிக்கத்தி னின்றும் அகன்ற நாளாகிய மாசி மாதத்து நாலாம் நாளில் உணர்ச்சி ததும்பும் ஒருவித கொண்டாட்டத்தையும் நாம் காண்கின்றோமில்லையே. இது எதற்காக? ஒன்றில் அடிமைத் தளையினின்றும் இலங்கையர் அகலாத நிலைமை, அன்றேல் விடுதலைபெற்ற விதம் உற்சாகத்தைக் கொடுக்காத தன்மை.

அடிமைத்தளை அகலவில்லை என்ற கொள்கையினர் இல்லாமலில்லை. அவர்கள் அடிமைத் தன்மைக்கும் விடுதலை நிலைக்கும் வரைவிலக்கணங் கூறுவதை ஆராய்ந்து பார்த்தால் எப்போதாவது அடிமைத்தளை நீங்க இங்கு மாத்திரமன்று எங்கேயாவது முடியுமா என்று எண்ண வேண்டியிருக்கின்றது. புறநாட்டாரின் ஆளுகையை அகற்றிச் சுய நாட்டார் அரசியலை அமைப்பதையே பொதுவாகச் சுதந்திரம் அடைதலென்று சொல்லுவார்கள் அரசியல் அறிஞர்கள். அந்த முறையில் இந்த இலங்கையில் அந்நிய நாட்டார் ஆட்சி போய் இந் நாட்டவர்களின் ஆட்சி ஏற்பட்டிருப்பது விடுதலையைக் குறியாது விடுமா?

ஆகவே விடுதலை அடைந்த விதத்தில் மெச்சக்கூடியதொன்றுமில்லை என்ற கூற்றை எடுத்தாராய்ந்தால் அதில் ஓருண்மை உண்டு. அழுதால உன்னைப் பெறலாமேயென்று ஆன்மார்த்த ஞானிகள் கூறுவர். அழுகை ஒரு துன்பத்தைக் கொடுக்குஞ்செயல். அதன் பயன் இன்பம். எங்கள் நாட்டில், விடுதலைக்காக ஆர் அழுதார்? ஆர் அடிபட்டார், ஆர் அல்லலில் உழன்றார் என்றால் அந்தத் தியாக நிகழ்ச்சி மிக மிகச் சிறிதாகவே காணப்படுகின்றதென்பதை எவரும் மறுக்கார். இந்தியா நாட்டில், கோலொடு உலாவும் கிழவர்களும் பால்மணம் மாறாப் பாலர்களும் குபேர சம்பத்தில் கரைபுரண்டு இந்திரபோகந் துய்த்த கோடீசுவரன்களும் ஏருழுது வியர்த்த ஏழைகளும் ஆணும் பெண்ணும் யாவரும் விடுதலைக்காக அழுதனர், ஆர்வங்கொண்டனர், ஆரவாரஞ்செய்தனர், அடையும் அளவும் அயராதுழைத்தனர். உடல்பொருள் ஆவியை அர்ப்பணஞ் செய்தனர். பெற்றனர் பேறு, பேருவகையுற்றனர். உற்றால் ஆனந்தக்கூத்தாடாது விடுவார்களா? கருமகளிருக்கப் பனம்பழம் விழுந்தாங்கு உலக யுத்தத்தின் ஒருவிளைவாக எங்கள் நாடு விடுதலை அடைந்தது. ஆனால் விடுதலையை எங்கள் தலைவர்கள் வேண்டினார்கள் என்பதை மறுக்க முடியாது. வீரப் போர் புரிந்து வேண்டவுமில்லை. வெற்றி பெறவுமில்லை.

இந்த நிலைமையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதா விடுவதா என்ற சந்தேகம் எழவேண்டியதில்லை. பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அந்நிய நாட்டினரின் ஆட்சிக்கீழிருந்த நாம் அவ்வித அடிமைத் தளையினின்றும் விடுபட்ட தினத்தைக் கொண்டாடி வந்தாற்றான் நாம் பெற்ற இந்த விடுதலை எவ்வாற்றானும் பூரண விடுதலையாக மிளிரக்கூடிய ஒரு தனி நிலைமைக்காக உழைப்பதற்குக் குடிசனங்களைத் தூண்டிவிடக்கூடியதாயிருக்கும்.

## தாய் மொழியிற் கல்வி பயிற்றல்

### சர்வகலாசாலையார் ஆலோசனை

சர்வகலாசாலையிற் கல்வி தாய்மொழிகளிற் பயிற்றுவதற்கு முதற்படியாக உயர்தர வகுப்பினர் தங்கள் பாடங்களைத் தங்கள் தாய் மொழிகளில் எடுத்தாளக் கூடியவர்களாகச் செய்யும் விஷயத்தைச் சர்வகலாசாலை மேற்சபையினர் (Senate) ஆலோசிக்கின்றனர்.

## சீனி — எண்ணெய்த் திட்டப் பங்கு

அரசாங்கம் அமைக்கப்போகின்ற சீனி ஆக்கத் திட்டம், எண்ணெய் ஆக்கத் திட்டங்கள் உருவாக்குவதற்கு வேண்டிய தொகையில் ரூபா 20,000,000 பெறுமதியான பங்குகள் நாட்டு மக்கள் பங்கு பற்றுமாறு கொடுக்கப்படும்.

யாழ்நகரில்

# சுதந்திர தினக் கொண்டாட்டம்

### மாட்டுவண்டிச் சவாரி

1. அளவெட்டி திரு. வீ. நாகமணி
சாரதி - மல்லாகம்
திரு. க. கதிரிப்பிள்ளை
(பரிசு ரூபா. 75/—)
2. சுன்னாகம் திரு. ஆறுமுகம்
சாரதி - அச்செழு
திரு. கந்தையா
(பரிசு ரூபா. 50/—)
3. உரும்பராய் திரு. குமாரசாமி
சாரதி - அவரே
(பரிசு ரூபா. 25/—)
4. சரசாலை திரு ஆ. வேலுப்பிள்ளை
சாரதி - திரு. ச. ஞானமுத்து
(பரிசு ரூபா. 10/—)

O

### இசைக்கலைப் பேச்சுக்கலைப்போட்டிகள்

இணுவில் ஸ்ரீ காலிங்கன் படமாளிகையில் சுதந்திர விழா நிகழ்ச்சிகளாய் 4—2—52 ல் இசைக்கலைப் பேச்சுக் கலைப் போட்டிகள் நடத்தப்பெற்றன. கீழேவரும் பாடசாலைகள் குறித்த பரிசுகள் பெற்றன.

#### இசைக்கலைப் போட்டி

மேற்பிரிவு

1-ம் பரிசு ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை
2-ம் பரிசு மயிலணி சைவவித்தியாசாலை.
3-ம் பரிசு இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை

மத்திய பிரிவு

1-ம் பரிசு ஏழாலை தெற்கு அ.மி.பாடசாலை மயிலணி சைவவித்தியாசாலை.
2-ம் பரிசு இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை.
3-ம் பரிசு அளவெட்டி — சீனன் கலட்டி வித்தியாசாலை

கீழ்ப்பிரிவு

1-ம் பரிசு இணுவில் மகாஜன வித்தியாசாலை.
2-ம் பரிசு இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை
3-ம் பரிசு குளமன்கால் — றே. க. பாடசாலை.

#### பேச்சுக்கலைப் போட்டி

மேற் பிரிவு

1-ம் பரிசு. உடுவில் சதானந்த வித்தியாசாலை
2-ம் ,, தெல்லிப்பழை-கிழக்கு சைவவித்தியாசாலை
3-ம் ,, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

மத்திய பிரிவு

1-ம் பரிசு. உடுவில்— முருகமூர்த்தி வித்தியாசாலை
2-ம் ,, அளவெட்டி— சதானந்த வித்தியாசாலை
3-ம் ,, தெல்லிப்பழை— கிழக்கு சைவவித்தியாசாலை

கீழ்ப் பிரிவு

1-ம் பரிசு அளவெட்டி சதானந்த வித்தியாசாலை
2-ம் ,, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
3-ம் ,, [illegible]

**புதையற் பொன்மொழி**

ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் புதைத்து வைத்தது

கலியாணப் பந்தர்களிலே முற்பக்கிலிற் போயிருப்பவர்களும் சுபலகத்தை மாத்திரம் விரும்புபவர்களு மல்லர் பிரபுக்கள். பொதுநன்மைகளை விரும்பிச் செய்பவர்களே பிரபுக்கள். அவர்களே பெரியவர்கள். "நிசாதகற் சிவதரும சிவஞான சிந்தை நிதத்திடுவோனிலுமுயர்ந்தோனிலதநிலிலை - பகர்பாமசிவயோகியவனேயாகும்.

## சௌராட்டிர தேசத்தேர்தல்

### தேசிய மகாசபைக்குச் சிறந்த வெற்றி

காந்தியடிகளின் தாயகமாகிய சௌராட்டிர தேசத்தில் இந்திய பொதுத் தேர்தலில் 60 இடங்களிலுள்ள இராச்சிய சபையில் இந்திய தேசியமகா சபை 55 இடங்களைக் கைப்பற்றியதென்றும் இந்திய மக்கள் சபையிலுள்ள 6 இடங்களையும் தேசிய மகாசபையே பெற்றுவிட்டதென்றும் செய்தி கிடைத்திருக்கின்றது.

காந்திய கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இந்திய தேசிய மகாசபைக்கு இது ஒரு மகத்தான வெற்றியாகும்.

## காரைநகர்க் கமக்காரர் நிலைமை

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை யென்னும் உயரிய கொள்கையே வாழ்க்கையில் இயல்பாயமைந்த தமையின் யாழ்ப்பாண மக்களுட் பெரும்பான்மையோர் கமத்தொழிலையே உயிர் வாழ்க்கைக்குரிய தொழிலாகக் கொண்டு பல்லாண்டுகளாய் வாழ்ந்து வந்தனர். திரைகடலோடியுந் திரவியந்தேடு என்றபடி காலகதியில் மலாயா முதலிய புறநாடுகளுக்குச் சென்று பொருளீட்டுதலையும் ஒருவாறு மேற்கொண்டனர். அவ்வாறு பொருளீட்டும் வழிகள் இன்று இல்லாதொழிந்தனவாகத் தமக்கு இயல்பாயமைந்த கமத்தொழிலென்றே, யாவருக்கும் வாழ்க்கைக்கின் றியமையா வழியாயிருக்கின்றது.

சென்ற சில ஆண்டுகளாக மழைவளம் குன்றி வருவதாற் கமத்தொழிலுக்கும் பெருமிடையூறுண்டாகி வருகின்றது. இதையுற்று நோக்கிய காரைநகர்க்கமக்காரர் நீர்வளமுள்ள வேறிடங்களுக்குச் சென்று கமத்தொழிலை விருத்திபண்ணுவதே புத்தியாகுமென்றொர் கூட்டத்திற் றீர்மானித்திருக்கின்றனர். இத்தத் தீர்மானம் மிகவும் போற்றத்தக்கது. இத்தத் தீர்மானம் சொல்லளவில் நில்லாது செயலிலும் உருவெடுத்தற்குக் காரைநகர் வாசிகள் யாவரும் ஒருமுகப்பட்டுழைக்க வேண்டும். யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலுள்ளோரும் இதை ஓர் முன்மாதிரியாகக் கொண்டு உற்சாகத்துடன் பின் தொடர்ந்து செல்லுதல் இன்றியமையாது வேண்டப்படும். இம்முயற்சிகள் இனிது ஈடேறுவதற்கு வேண்டிய உதவிபுரிதல், பாராளுமன்றப் பிரதிநிதிகள், மந்திரிகள் முதலிய தேசத்தொண்டர் யாவர் மீதும்பொறுத்த இரும்பெருங் கடனாகும்.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

### துவரை விதைத்தால் அவரை தோன்றுமா?

சென்ற பொதுத் தேர்தலின் பொழுது உரும்பராயில் நடந்த ஒரு தேர்தற் கூட்டத்தில் அக்கிராமத்தைச் சேர்ந்தவரும் அக்கிராமத்திற்கு மாத்திரமன்றி அகில இலங்கைக்கும் புகழைத் தேடிய ஒரு பெரியார் ஒரு அபேட்சகருக்காகப் பேசும்பொழுது கல்லால் உபசரிக்கப்பட்டனர். அவர் வீரபுருஷர். அஞ்சா நெஞ்சு படைத்தவர். அக் கற்கலைத் தன் கையலேந்தி ஆண்மையைக் காட்டினர்.

x x x

வேறோர் கூட்டத்தில் ஒரு அபேட்சகருக்காகப் பெருங் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அவ்வமையம் மற்றைய அபேட்சகரும் அவரது ஆதரவாளர்களும் கூட்டத்தை வலம்வந்து ஆரவாரித்தனர்.

x x x

இந்த 'வீரசிகாமணிகளின்' செயலைக் கண்டு காணூர்போ... விருந்தவர்கள இப்போது வெவ்வேறு கட்சிகளிலிருக்கின்றனர்.

x x x

### வாழ்க்கை வானிற் காரிருள்!

கூட்டக் குழப்பும் கொள்கை எப்போது எவரால் ஆரம்பிக்கப்பட்டதென்று ஆராயவேண்டிய அவசியமில்லை. சுதந்திரம் சுதந்திரம் என்று சொலவித் திரிபவர்கள் மற்றவர்களுக்கேன் சுதந்திரம் வழங்கக் கூடாது. ஒருவர் சுதந்திரம் முடிந்த இடத்திற்றான் மற்றையவர் சுதந்திரம் ஆரம்பிக்கும் என்றது ஆங்கிலப் பழமொழி. கூட்டத்திற்குப் போகின்றவர்கள் யல்லாம் அக்கூட்டத்தின் கொள்கையை ஆதரிப்பவர்களா? கூட்ட எண்ணுக்கணக்கால் ஏதும் நடைபெற முடியுமா. ஒருவரின் கொள்கையை மற்றையவர் ஏன் அறியக் கூடாது.

x x x

தமிழ் மரபும் தமிழ்ப்பண்பாடும் கொன்று எல்லாக் கட்சியின

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

### சேவையைப் பாராட்டுதல்

கல்வி அறிவு, பண்பாடு, சீலம், சமூகப்பணி முதலிய சுகுணங்கள் பொருந்தப்பெற்ற பெரியார்களைக் காலத்துக்குக் காலம் ஊரவர்களும் அரசினரும் கௌரவித்து வருகிறார்கள்.

ஆங்கில இந்துசாதனத்தின் பழைய கௌரவ ஆசிரியரும், இக்கல்லூரி மானேசரிலரும், ஹிந்துக்கல்லூரிப் பிரதமாசிரியரும் இவைபோன்ற பல தாபனங்களிலிருந்து பணியாற்றிய பல பெரியார்களும் அரசினரால் சமாதான நீதவான் (J. P.) முதலிய கௌரவப் பட்டங்கள் வழங்கப் பெற்றிருக்கின்றனர்.

சென்ற 42 வருடம் இந்துசாதனத்தின் கிருபராயும் ஆசிரியராயுமிருந்து பணியாற்றி, இப்பொழுது இளைப்பாறிய பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களை இப்பொழுது பாராட்டிக் கௌரவித்தல் மிகவும் பொருத்தமுடையதாகும். அன்னார் இக்கல்லூரியின் தமிழ்ப் பண்டிதராயும் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயும் 32 வருடம் பணி புரிந்திருக்கின்றனர். உயர்தர வகுப்பிற் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்க பல நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டுள்ளனர்; அரிய தமிழ் வசனத்தைத் தெவிட்டாத முறையில் எழுதி மகிழ்வித்தவர்; தாம் எழுத எடுத்த விஷயத்தைத் தருவி ஆராய்ந்து சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் நடுநின்று எழுதுகின்றவர்.

உரை ஆசிரியர் எனப்பெயர் படைத்த இவரது தந்தையாரை இந்தியாவிலுள்ள அறிஞர்க் குழுவினர் "பிள்ளைப் புலவர்" எனனும் புலமைப்பட்டம் சூட்டிக் கௌரவித்துள்ளனர்; இவரது சகோதரரான வழக்கறிஞர் திரு மாணிக்கவாசகர் அவர்களை (J. P.) சமாதான நீதவான் பட்டம் அளித்து அரசினர் சம்மானித்தனர். கல்வி உலகம் போற்றும் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்கள் இவர் உடன் பிறந்தவர். உதயதாரகைப் பத்திராசிரியர் திரு. குக் அவர்களும் ஈழகேசரிப் பத்திராசிரியர் திரு. நா. பொன்னையா அவர்களும் சமாதான நீதவான் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றிருக்கின்றனர். ஆகவே பண்டிதர் அவர்கள் இளைப்பாறிய பத்திராசிரியர் என்ற முறையிலும் பலபுத்தகங்களின் ஆசிரியர் என்றமுறையிலும் கௌரவம் பெறத்தக்கவரேயாவர்.

இங்ஙனம்,

சைவாபிமானி.

### தமிழ் மொழியில் நகரசபைக் கூட்டம்

தங்கள் கூட்டங்களைத் தமிழ் மொழியில் நடத்துதற்குத் திருக்கோணமலை நகரசபையார் தீர்மானித்திருக்கின்றனர்.

## மணிவாசகர் புகழ்ந்த - - மகத்தான அன்பு

### கண்ணப்ப நாயனாரின் ஒப்பற்ற பெருமை

( திரு. செ. கோவிந்தசாமி உதவியது )

சிவனடியார்களுள் ஒருவரான கண்ணப்பர், பூர்வ ஜென்மத்திலே தவஞ் செய்து அதிதீவிர அன்பு நிலையை எய்தியவர். இஃது "முன் செய்த தவத்தினீட்ட முடிவிலா இன்பமான" என்று சேக்கிழார் பெருமான் கூறுவதாலும் அறியப்படும். அருச்சுனன் அவதாரமே கண்ணப்பனென்பர். ஆன்மாக்கள் ஈடேறும்பொருட்டு அன்பின் சிறப்பை உலகினர்க்குக் காட்டுவான் அன்பே சிவமாக உருவெடுத்த கண்ணப்ப நாயனார் சைவ வேடுவ குலத்தில் அவதாரமானார். "கருவாய்க் கிடந்தே" அவன் திருவடியின் நினைப்புடையவராய் இருந்தார்.

இத்தகைய நாயனார் ஒரு நாள் தனது குலத்துக்குரிய வில்லும் அம்பும் கொண்டு வேட்டையாடுவதற்குத் திருக்காளத்தி மலைக்குச் சென்றார். அம்மலைச்சாரலில் ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டார். உடனே வில்லையும் அம்பையும் எறிந்தார். நெக்குநெக்குருகினார், நின்றும் இருந்தும், கிடந்தும், நடந்தும், அழுதும், தொழுதும், வாழ்த்தினார். "உள்ளந்தான் நின்று உச்சியளவும் உருகாநிற்கும்" இந்த அற்புத அன்பு நிலைமையை மணலால் லிங்கம் அமைத்துப் பாலால் அபிஷேகம் செய்த சண்டேசுர நாயனாரிடத்திலும் கண்டோம்.

இந்த ஒப்பற்ற அன்பு நிலைமையில் திருக்காளத்தி மலையில் நிற்கும் கண்ணப்பர் யாது செய்கிறார். தாம் வேட்டையாடிக்கொண்டு வரும் இறைச்சியைத் தின்று ருசி பார்த்து அதில் நல்ல இறைச்சியை இறைவனுக்கு நைவேத்தியமாகவும், வாய்க்குள் வைத்திருக்கும் நீரைத் திருமஞ்சன நீராகவும் கொண்டு அபிஷேகம் செய்து இறைவனைப் பூசிக்கிறார், "பொருப்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்க" என மணிவாசகம் கூற மாற்றான் மந்திரக்கிரியை நடந்த கண்ணப்பரது அன்பு வழிபாடு அமைகின்றது. திருக்காளத்தி ஈன்வாருக்குத் தினந்தோறும் பூசை செய்து வரும் சிவகோசாச்சாரியரெனும் அந்தணரும் கண்ணப்பரது மந்திரக்கிரியை நடந்த அன்புப்பூசையை மறைந்திருந்து பார்த்திருக்கிறார் — கண்ணப்பர் பூசை செய்ய வருகிறார். சிவலிங்கத்தின் வலது கண்ணினின்றும் உதிரம் சொரிகிறது. கண்ணப்பர் பதைபதைக்கிறார். பல மூலிவகை மருந்துகளினால் வைத்தியம் செய்கிறார். ஒன்றாலும் முடியாது — இறுதியில் தனது வலக்கண்ணைப் பிடுங்கி சிவலிங்கத்தின் கண்ணில் வைத்தார். உடனே உதிரம் நின்றுவிட்டது—ஆனந்தம் கொண்டாடினார். பின் இடக்கண்ணும் மற்றதுபோலவே உதிரம் சொரியத் தொடங்கியது. கண்ணப்பர் தனது இடக் கண்ணையும் பிடுங்க எத்தனித்தார். அக்கணமே பரமபிதாவாகிய சிவபெருமான் கண்ணப்பரது பக்குவத்தையுணர்ந்து, "நில்லு கண்ணப்ப!" நில்லு கண்ணப்ப! என்று கூறியருளித் தடுத்துக் கண்ணப்பரை ஆட்கொண்டருளினர்.


**உழைப்பதற்கு வழி!**

மாதம் ரூபா 100 தொடக்கம் 300 வரையில் மூலதனமின்றி ஓய்வு நேரங்களில் உழைக்க ஒரு வழியுண்டு. இதுபற்றிய விபரங்களை இவ்விலாசத்திற் கெழுதி அறிக. விபரங்கள் இலவசம்.

**Girson Knitting Works**
**Ludhiana 9**


### வாழ்க்கை வசனம்

2-ம் பக்கத்தொடர்ச்சி

ரும் மார்புதட்டிக் கூறிக்கொள்கின்றனர். தமிழ்மரபாகாத பழக்கங்களை ஒழிக்கத் தலைவர்கள் முயற்சிசெய்யாதுவிட்டால் இராக்கத இயக்கம் ஆரம்பிப்பது திண்ணம்!

### கண்ணப்ப நாயனார் குருபூசை

நிகழும் கர வருஷ தைமீ 23உ (6-2-52) புதன் கிழமையன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் அச்சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் கண்ணப்பநாயனார் குருபூசை நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

இரவு 6½-7 கடவுள் ஆராதனை 7 - 9 நீராவியடி ஸ்ரீமத் ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் கண்ணப்ப நாயனார் என்னும் பொருளைபற்றிப் பிரசங்கங்கள்.

மாணவர்கள் செல்வன், இ. மகாதேவன், செ. குணரத்தினம், பண்டிதர் திரு. கா. நமசிவாயம், திரு. சி. குலரத்தினம், சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
4 - 2 - 52.
M 198 5—2—52.

### அறிவித்தல்

உடுப்பிட்டிக் கிராமச்சங்க எல்லைக்குள் வல்வெட்டிக் கிராமத்தில் ஓர் கிணறு வெட்டுவதற்கு 1952-ம் ஆ. மாசிமீ 9உ முற்பகல் 10 மணிவரையும் கேள்விப் பத்திரம் என்னால் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா இருபத்தைந்து சங்கக் கந்தோரில் கட்டியதன் பேரால் கேள்விப் பத்திரம் என்னாற் கொடுக்கப்படும்.

தேவையான விஷயங்களை உடுப்பிட்டிக் கிராமச் சங்கக் கந்தோரில் வந்து அறியவும்.

யாழ்ப்பாண ஸ்தலஸ்தாபனக் கந்தோரில் பதியப்பட்ட நாமாவளிகளுக்கு மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இ. தா. சிவகுருநாதன்
உடு. கி. ச. தலைவர்.

உடுப்பிட்டி
30 - 1 - 52.
M 194 1, 5—2—52.

### யாழ்ப்பாணம் இந்துமகா சபை

காங்கேசன் துறைமுகத்திற்கு ஆதரவு

இம்மகாசபையின் 11ம் வருடாந்த விழா சபை மண்டபத்தில் தலைவர் R C. மன்மதராயன் அவர்களின் தலைமையில் தேவாரத்துடன் கூடியது. அவ்வமயம் தமது முன்னுரையில் சபையின் வருங்கால வளர்ச்சியைப்பற்றியும், இதுகாறும் இச்சபையால் இவ்வட்டார மக்களெய்திய நன்மைகளைப் பற்றியும் கூறிச் சபையின் வளர்ச்சிக்காக அங்கத்தவர்களின் ஆதரவைக் கொடுக்கும்படி மிகவும் அன்புடன் வேண்டிக்கொண்டார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வரும் பிரமுகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

போஷகர் ஸ்ரீ C. C. சோமசேகரம் (Crown Proctor) உபபோஷகர் ஸ்ரீ S. P. கந்தையா F. I S. A (Lond), தலைவர் ஸ்ரீ C. நாகையா ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி, உபதலைவர்கள் ஸ்ரீமான்கள் R. C. மன்னவராயன் (M. M. C. யாழ்ப்பாணம்), K. பொன்னையா, காரியதரிசி ஸ்ரீ T சத்தியநாதன், உபகாரியதரிசி ஸ்ரீ K. கமலநாதன், உபதனாதிகாரிகள் ஸ்ரீமான்கள் N. ஸ்ரீரங்கநாதன் S மகேஸ்வரன்.

நிர்வாகசபை அங்கத்தவர்கள்:— திருவாளர்கள்: R. மன்னவராயன், T. இரத்தினலிங்கம், S. விமலேஸ்வரன், A. நீலகண்டன், T. சுப்பிரமணியசர்மா, ப. செல்லையா, T. சிவராசா, N. வெங்கடேசன், T. பத்மநாதன், கணக்குப்பரிசோதகர்:— ஸ்ரீமான் C. வீரசிங்கம், (ஆசிரியர்), வாசிகசாலைப்பொறுப்பாளர் ஸ்ரீ G. பாலகிருஷ்ணன்.

இச்சபை மேலும் நாமதிக்காது இத்தீவின் மற்ற துறைமுகங்களைப் பார்க்கிலும் காங்கேசன்துறை மிகவும் முக்கியமான தொழில் ஸ்தாபனங்களைத் தன்னகத்தே உடையமையாலும் அரசாங்க ஆலோசகர் Mr. கோட் அவர்களின் சிபார்சு அறிக்கையிலும் காங்கேசன்துறை விசேட தன்மைபொருந்தியதாக இருப்பதாலும் காங்கேசன்துறையையே துறைமுகமாகத் திறக்கும்படி இச்சபை வேண்டுகின்றது.

### சுதந்திரம் என்றால் என்ன!

நகரசபைத் தலைவரின் வேண்டுகோள்

யாழ்ப்பாண நகரில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது நகரசபைத் தலைவர் திரு. சாம் சபாபதி அவர்கள் சுதந்திரம் என்பது என்ன என்று எவரும் அறியவேண்டிய அவசியமென்றும் பரஸ்பர நம்பிக்கையும் ஒருவருக்கொருவர் தாராள சிந்தையுள்ளவர்களாயிருக்கின்றமையும் சுதந்திரத்தில் இன்றியமையாது வேண்டப்படுவனவென்று கூறி ஒற்றுமையாகப் பலவேறு வகுப்பினரும் வாழ்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

நியாயவாதி திரு. மு. பாலசுந்தரம் பேசும்பொழுது மேல்நாடுகளில் சுதந்திர தினம் கொண்டாடப்படும் வழக்கத்தை விரித்துரைத்து இலங்கை அடைந்த சுதந்திரத்தைப் பாதுகாத்துப் பேணிவைப்பது தான் குடிசனங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் என்றும் கூறினர்.


என்றுங்காணு

**இன்னிசைவிருந்து**

: யாழ்ப்பாண நகரில் :

**மாசிமீ 25உ (8-3-52)**

**சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு**

xxxxxxx இசை அரசு xxxxxxx

**M. M. தண்டபாணிதேசிகர்** வாய்ப் பாட்டு

பாங்கான பக்கவாத்தியம்

| | |
|---|---|
| மதராஸ் கண்ணன் | மிருதங்கம் |
| லால்குடி ஜெயராமன் | வயலின் |
| காஞ்சி S. விருசாமி | கெஞ்சிரா |

சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம விளக்கமா, ஆடம்பர வாழ்வா?

## எது வேண்டும் எங்கள் ஈடேற்றத்திற்கு

## ஆன்மார்த்தக் கல்வியின் அவசியம்

நவீன நாகரிகம் நம்மில் வேகமாய்ப் பரவிவருகிறது. இதன் முன்னிலையில் நமது ஆன்மார்த்த நாகரிகம் தலை வணங்கி ஒதுங்கி நிற்கின்றது. நமது பண்டைப் பெருமை எல்லாம் கனவாகி விட்டது. முற்காலத்தில் ஆன்ம விளக்கமே மக்கட்குரிய இலட்சியமாயிருந்தது. தற்காலம் ஆடம்பர நாகரிகமே குறியாயிருக்கிறது. இக்காலத்தில் யோக்கியமாயும் உண்மையாயும் சீவியஞ் செய்தல் வெகு துர்லபம். மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தத்தக்க ஒழுக்கக் கல்வி அடியோடு குன்றிவிட்டது. பிறநாட்டுக்கல்வி ஆதிக்கம்பெற்று நாட்டு மொழிகளையும் கலைகளையும் புறக்கணிக்கச் செய்துவிட்டது. கோடிக்கணக்கான மக்கள் தம் தாய்மொழியறிவின்றி அறியாமையோடிருக்கின்றமைக்கு ஆங்கிலக் கல்வி ஒரு காரணமென்றாலும், மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியும் நமது நாட்டு ஆன்மார்த்த ஆராய்ச்சியும் கலந்த கல்வி முறையே தற்போது வேண்டற்பாலது.

பலவித காரணங்களால் நமது நாடு வறுமையினுள் மூழ்கியிருக்கிறது. நாட்டில் வருவாய் சுருங்கிச் செலவு மிகுந்திருக்கிறது. பெரும்பாலும் எங்கள் விவசாயி எவ்வளவு தரித்திரத்தை அநுபவிக்கக்கூடுமோ அவ்வளவையும் அநுபவிக்கிறான். அதிலும் புன்செய் விவசாயியைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. சில்லறை வியாபாரங்களைத் தவிர மேனாடுகளிலுள்ளபடி கூட்டுறவு முறைகொண்ட பெரிய உலக வர்த்தக முறைகளும் கைத்தொழில் முறைகளும் நமது மக்கட்குத் தெரியாதென்றே கூறவேண்டும். இவையெல்லாம் அவ்வக் கல்

**தென் ஆபிரிகா திரு. ச. மு. பிள்ளை அவர்கள் வரவது**

விப் பெருக்கத்திலேயே பெறத்தக்கவையாகும். மேலே சொன்ன காரணங்களால் தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் நமது நாட்டு மக்களால் உற்பத்தி செய்ய முடியவில்லை. இந்நிலையில் நவீன நாகரீக மோகமும் சனங்களைப் பலமாய்ப் பற்றிக்கொண்டது. அன்றியும் இக்கால நாகரிகம் வேண்டாத தேவைகளை வேண்டும்படிச் செய்து கொண்டிருக்கிறபடியால் மக்கட்கு அவற்றை விட்டு நீங்கி இருக்கவும் முடிகிறதில்லை. வறுமை நிலை ஒருபக்கம்; ஆடம்பரம் ஒரு பக்கம் சனங்களைத் துன்பம் செய்துகொண்டிருக்கின்றன.

ஆடம்பரவாழ்வு எப்போதும் அசாந்தத்தையே விளைக்கும். ஆடம்பரமாக வாழ்ந்து கெட்ட எத்தனையோ குடும்பங்களை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். எளிய ஆடம்பரமற்ற வாழ்வு ஒன்றே ஒருவனுக்குச் சாந்தியளிக்கும். எல்லாவித மத உண்மைகளும் ஆடம்பரத்தை வெறுக்கின்றன. உலகில் புகழ்பெற்ற மத ஸ்தாபகர்களும் பெரியோர்களும் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி வந்ததாகவே நாம் கேள்விப்படுகின்றோம். நமது நாட்டு ஒழுக்க நூல்களும் எளிய வாழ்வையே வற்புறுத்துகின்றன.

மனிதனுக்கு ஆசை பெருகப்பெருக துன்பமும் அதிகமாகிறது. இவன் எந்தப் பொருளை விரும்புகிறானோ அந்தப் பொருளை அடைய முயற்சி செய்யவேண்டும். மனித முயற்சி எல்லாம் பயன் தந்துவிடுமென்று சொல்வதற்கில்லை. "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்" ஆகவே கவலைக் கடலுள் மூழ்க நேரும். பேராசை கொண்ட ஒருவன் இந்த உலகில் சாந்தியாக வாழமுடியாது. ஆசைப் பேய் அடாத செயல்களிலும் போகத் துணிவு கொடுத்துவிடுகிறது. ஆதலால் ஆடம்பரத்துக்கு ஆசை காரணமாயிருத்தலின் அதை ஒழிக்காவிட்டால் சுகம் என்பது சித்திக்காது. பேனுங்கள் இந்த உண்மையை அலட்சியஞ் செய்துவிட்டு ஆடம்பரத்தில இன்னும் பற்றுள்ளங்கொண்டு நிற்கின்றன. அதன் முடிவைக் காலந்தான் காட்டவேண்டும்.

சிலர் சௌகரியமிருந்தால் ஆடம்பர வாழ்வு நடத்தக் கூடாதா? என்று கேட்கலாம். சிறிது ஊன்றிச் சிந்திப்போர் இந்தக் கேள்வி கேட்கமாட்டார்கள். அதிகச் செலவில் வாழவேண்டிய ஆடம்பர வாழ்வுக்கு ஒரு நியதி இல்லை. எவ்வளவு உன்னத சுகபோகத்தில் இருந்தாலும் அப்போதும் அதிருப்தியும் இருந்துகொண்டிருக்கும். உதாரணமாக உலகில அரசர்களைக் காட்டிலும் இடம் பொருள் ஏவல் பெற்றச் சுகபோகத்தில் மூழ்குபவர் ஒருவருமிலர். பண்டைக் காலந் தொடங்கி இக்காலம் வரை எந்த அரசனுடைய வாழ்வை ஆராய்ந்தாலும் ஒவ்வொருவனும் பற்பல துன்பங்களை அனுபவித்தமை நன்கு விளங்கும். எளியவன் வயிறு நிறக்கில்லையென்று வருந்துகிறான். நடுத்தரமாகவுள்ளவன் இலட்சப்பிரபுவாகிவிடப் பார்க்கிறான். இலட்சப் பிரபு கோடீஸ்வரனாகப் பார்க்கிறான், கோடீஸ்வரன் அரசனாகிவிடப் பார்க்கிறான். அரசனாகவுள்ளவன் தன்னுடைய தேசத்தோடமையாது வேற்றரசர் நாடுகளையுங் கவரப் பார்க்கிறான். ஆகையால் எத்தகைய ஆடம்பர வாழ்வும் மனச் சாந்தியை அளிக்காது என்பதை யாவரும் உணர்தலே அறிவுடைமையாகும்.

### தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் காந்தியடிகளின் சர்வோதய தினம்

மகாஜனக் கல்லூரியின் தமிழ் மன்ற ஆதரவில் காந்தியடிகளின் சர்வோதயதினம் 30-1-52 மாலை 4 மணியளவில் கொண்டாடப்பட்டது. பாடசாலையின் மண்டபத்திலே, மன்றத்தலைவர் திரு. சி. நாகலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. நா. கனகசுந்தரம் அவர்கள் காந்தியடிகளைப்பற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினர். பாடசாலைத்தமிழ்ப்பேராசிரியர் வித்வான் நா. சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்புரை கூறினர். மாணவன் ச. ஸ்ரீபாஸ்கரனின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.


திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ருணிமார்க்ஓடுகள்** 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

இலங்கையின் மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

**விளம்பரம்**

காங்கேசன்துறையிலுள்ள அரசினர் சிமேந்துத் தொழிற்சாலையில் 18 அங்குலம் வரைக்கும் பெருப்பமுள்ள காட்டுக்கல்லு எவ்வளவு தொகையும் வாங்கப்படும்.

கல்லு விற்க விரும்புவோர் தங்கள் மனுப்பத்திரங்களில் தொழிற்சாலையில் ஒரு தொன் கல்லுக் கொண்டுவந்து என்ன விலைக்கு விற்க இயலும் என்பதை விபரமாக எழுதிக் கீழ்க் கையொப்பமிடும் தொழிற்சாலை மேலதிகாரிக்கு 1952-ம் ஆண்டு பெப்ருவரி 15-ந் திகதி பகல் 12 மணிக்குள் கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

ஆர். சி. மல்கோறு
ஜெனரல் மனேஜர்
அரசினர் சிமேந்துத் தொழிற்சாலை
25—1—1952
G. 56 5—2—1952

**விற்பனைக்கு**

மிலிற்றறி சப்ளையில் வாங்கப்பெற்ற கீழ்க்கண்ட மருந்துகள் சகாயமானவிலைக்கு விற்பனைக்கு இருக்கிறது.

தேவையுள்ளவர்கள் காலை 9 மணிக்குமேல் மாலை 5 மணிக்குள்ளாக வந்து நேரில் விலைபேசி வாங்கிக்கொள்ளலாம். மொத்தமாகவும் சில்லறையாகவும் கொடுக்கப்படும்.

*Names of Drugs*

Adhessive Plasters
First aid dressing
Asperin tablets
Atabrine tablets
Halasone Water purifier
Foot powder
Adhessive Compressor

பி. கு. நா. (FIRM)
212. K. K. S ரோட்
யாழ்ப்பாணம்.
M. 197 5—2—52

**சாலாம்ஸ்ரி லேகியம்**

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், மூரசு கரைதல், மூரசால் சீழ்வடிதல், மூரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday, February 5, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org